DEPOSITION OF WITNESS

CHAPTER CODE OF CIVIL PROCEDURE

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, THENI.

**OS.NO.88/2022**

Deposition of Witness : P.W.3

| | |
|---|---|
| Name-**திரு.மனோஜ் பிரபாகர்** | Father's Name – |
| Village - | Taluk- |
| Caste - | Calling - |
| Religion - | Age- |

Solemnly affirmed in accordance with the provisions of Act x of 1873 of the day of **10.07.2026**
(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )
**முதல் விசாரணை** –

1. நான் சென்னை மியாட் மருத்துவமனையில் முதுநிலை நிர்வாகியாக கடந்த 2 ½ ஆண்டுகளாக பணியாற்றி வருகிறேன். இந்த வழக்கில் சாட்சியம் சொல்ல நீதிமன்ற அழைப்பாணை வந்துள்ளது. அதன்பேரில் மருத்துவமனை சார்பாக நான் சாட்சியம் அளிப்பதற்கு மருத்துவமனை நிர்வாகம் வழங்கிய அங்கீகார கடிதம் தாக்கல் செய்கிறேன்.

2. 10.06.2026ம் தேதியிட்ட அங்கீகாரகடிதம் வா.த.சா.ஆ.22. திருமதி.கேன்டி பிரியதர்ஷினி என்பவர் எங்களது மருத்துவமனையில் மருத்துவராக பணியாற்றினார், அவரது அடையாள அட்டை எண். 14866 ஆகும். மேற்படி கேன்டி பிரியதர்ஷினி என்பவர் பணிபுரிந்ததை காட்டுவதற்கான 09.06.2026ம் தேதியிட்ட வருகைப்பதிவேட்டின் சான்று அசல் வா.த.சா.ஆ.23. எங்களது மருத்துவமனையில் அலுவலர்கள் வருகையை பதிவு செய்வதற்கு

கைரேகை மற்றும் முகப்பரிசோதனை மூலம் பதிவு செய்வோம். 01.07.2021ம் தேதி முதல் 31.07.2021ம் தேதி வரையிலான கணினி வருகைப்பதிவேடு தாக்கல் செய்கிறேன், அது வா.த.சா.ஆ.24. கேன்டி பிரியதர்ஷினி என்பவர் எங்கள் மருத்துவமனையின் வருகைப்பதிவேட்டின் படி 19.07.2021ம் தேதியன்று மருத்துவமனை பணியில் இருந்துள்ளார்.

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. வா.த.சா.ஆ.23 ஆவணமானது எங்களது நிர்வாகம் நான் நீதிமன்றத்தில் ஆஜராகுவதற்கு கொடுத்த கடிதம் என்று சொன்னால் சரிதான். மேற்படி கடிதத்தில் கேன்டி பிரியதர்ஷினி சம்பந்தப்பட்ட வழக்கில் சாட்சியம் சொல்ல அனுமதி வழங்க சொல்லப்பட்டதென்றால் சரிதான். நான் கைரேகை பற்றியோ அல்லது முகபரிசோதனை பற்றியோ பேசுவதற்கான அறிஞர் இல்லை என்று சொன்னால் சரிதான்.

2. பொதுவாக முகம் மற்றும் கைரேகையை அடையாளப்படுத்தி வருகையை பதிவு செய்யாத சூழ்நிலை வரும்போது அடையாள அட்டை மூலம் வருகை பதிவு செய்யும் முறை எங்களது அலுவலகத்தில் உள்ளது என்றால் இல்லை. பொதுவாக வருகைப்பதிவேட்டின் விபரங்கள் சம்பளப்பட்டியலில் காட்டப்பட்டு ஒரு அலுவலர் பணியில் இருந்தாரா இல்லையா என்ற விபரம் இருக்கும் என்றால் சரிதான்.

3. கேன்டி பிரியதர்ஷினி எங்கள் மருத்துவமனையில் ஊதியம் பெற்றார் என்ற ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை. எங்கள் மருத்துவமனையில் கேன்டி பிரியதர்ஷினி பணிபுரியவில்லை என்றும், அதனால் தான் அவரது சம்பளப்பதிவேட்டை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யமுடியவில்லை என்று சொன்னால் சரியல்ல. கேன்டி பிரியதர்ஷினி

கேட்டுக்கொண்டதற்கிணங்க இந்நீதிமன்றத்தில் தோன்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கின் ஆவணங்கள் ஏற்கத்தக்கவையல்ல என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை – இல்லை</u>**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

A. SARAVANAKUMAR

Digitally signed by A. SARAVANAKUMAR
Date: 2026.07.10 16:55:39 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
தேனி.